# ஆசியுரை
# மரியாளின் தலைமைத்துவ பண்பு

ஆவணி மாதம் மரியாள் விண்ணகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை திருச்சபையானது ஆவணி 15ம் நாள் கடன் திருநாளாகக் கொண்டாடுகிறது. மரியாள் ஆன்மாவோடும், உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது எமது திருச்சபையின் விசுவாச உறுதிப்பாடாகும். விண்ணுலகத்தின், மண்ணுலகத்தின் தாயக இறைவனால் தெரிவு செய்யப்பட்டாள் என்பது எமது விசுவாசமாகும். இவையாவற்றிற்கும் அடிப்படை காரணமாக இருப்பது மரியாளின் இவ்வுலக வாழ்வு. மரியாளின் சாதாரண வாழ்வு இறைவனுக்கு ஏற்புடையதாக இருந்தது. குடும்பவாழ்வு, சமுதாயவாழ்வு, தனிப்பட்டவாழ்வு என்று பலகட்டங்களில் மரியாளின் தலைமைத்துவப் பண்பு மேலோங்கி இருந்ததையும் அதில் முக்கியவிடையமான தாழ்ச்சி, பணிவு போன்றவை அதற்குள் அடங்கியதாகவே இருந்தது. அதில் இரண்டு முக்கியமான பண்புகள் பற்றி ஆராய்ந்து பார்ப்போம். முதலாவது தேவையை உயத்துணர்தல், இரண்டாவது தேவைபூர்த்தியாகும்படி பணிப்புரை விடுத்தல்.

## 1.தேவையை உய்த்துணர்தல்:

“எலிசபத்தம்மாளைச் சந்தித்தல்” மரியாள் தேவையை உய்த்துணர்ந்தாள். பிறரின் உதவி கட்டாயம் தேவை என்று உய்த்துணர்ந்தபடியால், எலிசபத்தோடு மூன்று மாதங்கள் தங்கி அவளுக்குரிய முக்கியமான வேலைகளை செய்தாள் என்பதை நற்செய்திகள் கூறுகின்றன. தேவையை உணர்தல் என்பது முக்கியமான பண்பு. அன்புள்ளம், இரக்கஉள்ளம், கனிவானஉள்ளம் கொண்டவர்வர்களுக்கு அடிப்படையான தேவைகளை உணர்தல் என்பது முக்கியமானதாக இருக்கும். எமது வாழ்விலும் ஏழையோரின் தேவைகளை உணரவேண்டும். நாமும் என்னென்ன தேவைகளானாலும் பிறருக்கு செய்வதற்கு முன்வரவேண்டும். இறைவன் தாமே சிறப்பான ஆற்றலையும் அருளையும் கொடுப்பார். சிலவேளைகளில் நாம் மற்றவர்களின் தேவைகளை உணராமல் இருக்கின்ற தன்மையையும் காணக்கூடியதாக உள்ளது. மற்றவர்களுக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றது என்று உணர்வது மிகவும் முக்கியமான தலைமைத்துவப் பண்பு.

## 2) இனம்காணப்பட்ட தேவையை பூர்த்தி செய்யும்படி பணிப்புரை விடுத்தார்.

“காணாவூர் திருமணவிழாவின்போது மரியாள் குறையை தீர்த்தாள். ”இயேசுவிடத்தில் குறையைத் தீர்க்கும்படி கேட்கின்றாள்.” “எனது நேரம் இன்னும் வரவில்லை” என்று பதிலளித்தும் ஆண்டவர் இயேசு மிகவும் இரக்கமுடையவராய் குறையைத் தீர்த்தது மட்டுமல்ல, தரமானதாகவும் அக்குறையைத் தீர்த்துவைக்கின்றார். இங்கு மரியாளின் தலமைத்துவப் பண்பை காண்கிறோம். தேவையை இனங்கண்டது மட்டுமல்ல இன்னும் அத்தகைய செயலை பூர்த்தி செய்ய வேண்டுமென்றும், அக்குறையை தீர்த்துகொள்ள வேண்டு மென்றும், மும்முரமாக செயற்பட்டதன் காரணமாக அக்குறையை தீர்த்தது மட்டுமல்லாது தரமானதாகவும் செய்தார். “அதாவது இதுவரை அந்ததிராட்சை இரசத்தை எங்கே வைத்திருந்தீர்கள்’ என்று அதன் தரத்தை உயர்த்திப் பேசும் அளவிற்கு மரியாளின் தலைமைத்துவ பண்பு சிறப்பானதாக இருந்ததை காணக்கூடியாதாக உள்ளது. எனவே மரியாள் தாய் மட்டுமல்ல எம் எல்லோருக்கும் முன்மாதிரியான நல்ல தலைவராக இருக்கிறார். இக்காலகட்டத்தில் இப்படியான பண்புகளோடு தலைவர்களை காண்பது மிகவும் குறைவாக இருக்கிறது. இப்படிப்பட்ட பண்புகளையும் நாமும் எமக்குள்ளே வளர்த்துக் கொள்வோம்.

அன்புடன்,
அருட்பணி யூட் நிக்ஸன்
*Parish Priest*
*Our Lady of Deliverance Tamil Catholic Mission*
*Montreal (QC), Canada.*